Thalaivaasal
# தலைவாசல்
Thalaivaasal
எங்கள் பாரம்பரியம்
வீடு 01 வாசல் 65 | thalaivaasaltv@gmail.com | செவ்வாய்க்கிழமை | டிசம்பர் 08, 2020

## தற்கொலைத் தாக்குதல் பயிற்சிபெற்ற ஆறு பெண்கள் மட்டக்களப்பில் கைது

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் பிரதான சூத்திரதாரி சஹ்ராம் ஹாசிம்மிடம் தற்கொலைத் தாக்குதல்கள் உட்பட்ட பல்வேறு பயிற்சிகளை பெற்றார்கள் என்ற சந்தேகத்தில் பெண்கள் ஆறு பேர் நேற்று மட்டக்களப்பு காத்தான்குடியில் கைது செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

கொழும்பிலிருந்து சென்ற பயங்கரவாத தடுப்புபு மற்றும் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளே குறித்த கைது நடவடிக்கையை மேற்கொண்டிருப்பதாக மட்டக்களப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பெண்ணொருவரும் அவரது 3 மகள்மாரும், இரு மருமகள்மாரும் இவ்வாறு கைது செய்

03

## தனிமையில் இருந்த மூதாட்டி தீயில் எரிந்து மரணம்
### வவுனியாவில் சம்பவம்

வவுனியாவில் ஓமந்தை பொலிஸ் பிரிவுக்கு உட்பட சேமமடுவில் தீயில் எரிந்து படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பெண் உயிரிழந்துள்ளார்.

03

## பணப்பை பறித்த திருடனுக்கு உணவும் பணமும் கொடுத்த மூதாட்டி
### யாழில் நடந்த சுவாரஸ்யம்

யாழ்.நகரில் வீதியால் சென்று கொண்டிருந்த வயதான பெண் மணியின் பண பையை பறித்துக் கொண்டு ஓடிய திருடனை பொதுமக்கள் பிடித்து நையப்புடைத்த நிலையில், திருடனுக்கு பணம் கொடுத்து குறித்த வயோதிப பெண்மணி அனுப்பிவைத்திருக்கின்றார்.

03

## தமிழர் பகுதிகளில் 44 வீதம் வன இலாகா திணைக்களத்திடம்



வன இலாகா திணைக்களம் தமிழர் பகுதிகளில் 44 வீதத்தை தம்வசப்படுத்தியுள்ளதாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

இதனால், தமிழ் மக்கள் விவசாயம் செய்ய முடியாத நிலைமை உருவாகியுள்ளதாக அவர் நேற்று நாடாளுமன்றில் உரையாற்றும் போது சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், வடக்கு மாகாணத்தை பொறுத்த வரையில் கால்நடை பண்ணையாளர்கள் அதிகமாக உள்ளனர்.

இவ்வாறு இருக்கையில் கால்நடைகளைத் தடைசெய்து அவர்களின் வாழ்வாதாரத்தை

03

## கொரோனா தடுப்பு மருந்தை கொள்வனவு செய்யும் நிலையில் இலங்கை இல்லை

கொரோனாவுக்கான தடுப்பு மருந்து கண்பிடிக்கப்பட்டால் அதனை கொள்வனவு செய்யக்கூடிய நிலையில் இலங்கை தற்போது இல்லை. என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், தனவந்த நாடுகள் மாத்திரம் அவற்றைக் கொள்வனவு செய்ய வாய்ப்பளிக்காது இலங்கையைப் போன்று அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கும் தடுப்பு மருந்துகள் கிடைப்பதற்கு உலக சுகாதார ஸ்தாபனம் நடவடிக்கை எடுக்க வேண்டும் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

கொழும்பில் இன்று (திங்கட்கிழமை) நடைபெற்ற ஊடக சந்திப்பில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பணிப்பாளர் வைத்தியர் ஹரித அளுத்கே இதனை வலியுறுத்தியுள்ளார்.

அவர் தெரிவிக்கையில், "சர்வதேச ரீதியிலும் தேசிய ரீதியிலும் தடுப்பூசி மற்றும் மருந்துகள் பற்றி பேசப்படுகின்றன. எனினும், அவை இன்றும் பரிசோதனை மட்டத்திலேயே காணப்படுகின்றன.

03

## கொரோனா தொற்று: 37 நாட்களில் 122 பேர் மரணம்

**பிறந்து 20 நாட்களான சிசுவையும் கொன்றது கொரோனா**

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியிருந்த 20 நாட்களேயான சிசு, இன்று மரணமடைந்துள்ளது.

இது, ஆகவும் குறைந்த வயதில், கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகி மரணமடைந்த சம்பவமாக இலங்கையில் பதிவாகியுள்ளது. பொரளை சீமாட்டி வைத்தியசாலையிலே அந்த சிசு மரணமடைந்துள்ளது.

03

## மாத்தளன் கடற்தொழிலாளர்களின் ஏழு இலட்சம் ரூபா பெறுமதியான வலைகள் அறுப்பு
### இந்திய இழுவைப் படகுகள் அட்டகாசம்

மாத்தளன் கடற்றொழிலாளர்களின் ஏழு இலட்சம் பெறுமதியான வலைகள் இந்திய இழுவைப்படகுகள் அறுத்தழிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட கடல் பிரதேசத்தில் இந்திய மீனவர்களின் இழுவைப்படகுள் அண்மைக்காலங்களாக தொடர்ச்சியாக அதிகரித்துள்ள நிலையில் புயல்சீற்றம் காரணமாக கடற்தொழிலுக்கு செல்லாத நிலையில், நேற்று (07)மாத்தளன் பகுதியில் இருந்து கடற்தொழிலுக்குச் சென்ற

03

## மடுவுக்கு வருவதற்கு புலிகளிடம் அனுமதி பெறவேண்டியிருந்தது
### மன்னார் வந்த மகிந்த தெரிவிப்பு



நாட்டின் தலைவருக்கு மடு தேவாலயத்திற்கு வருவதற்கு தமிழீழ விடுதலைப்புலிகளிடம் அனுமதி பெற வேண்டியதொரு காலம் காணப்பட்டது.

03




**தரணி எங்கும் தமிழராய் இணைவோம்**





ஈழத்துச் சித்தர் தவத்திரு யோகர் சுவாமிகள் பற்றிய ஆவணப்படத்தின் இறுவட்டு வெளியீடு கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

கொழும்புத்துறையில் அமைந்துள்ள யோகர் சுவாமி சாமாதி ஆலயத்தில் இடம்பெற்ற இந்த வெளியீட்டு நிகழ்வில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராசா ஆவணப்படத்தை வெளியிட்டு வைக்க, சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன், ஹவாய் ஆதீனத்தைச் சேர்ந்த ரிஷி தொண்டுநாதன் சுவாமி ஆகியோர் இறுவட்டுகளைப் பெற்றுக் கொண்டனர். மு.சரவணனின் ஒளிப்பதிவு மற்றும் படத்தொகுப்பிலும், இ.தனஞ்சயனின் எழுத்து மற்றும் இயக்கத்திலும் இந்த ஆவணப்படம் உருவாக்கப்பட்டுள்ளது.

## தலைவாசல் தினம் ஒரு ஆரோக்கிய தகவல்



### பால் மற்றும் பால் உற்பத்திப் பொருட்கள்

எமது உணவில் பால் மற்றும் பால் உற்பத்திப் பொருட்கள் பிரதான பங்கினை வகிக்கின்றன. பால் ஒரு நிறையுணவாகும்.

அவை காபோகைற்றேற், புரதங்கள், கொழுப்பு, கல்சியம், கனியுப்புக்கள் மற்றும் விற்றமின்களைக் கொண்டுள்ளன.

பால்,தயிர், யோக்கட் சீஸ் மற்றும் பட்டர் என்பன சில பாலுற்பத்திப் பொருட்களாகும்.

பால் மாவை விட பாலே சிறந்தது.

ஒரு நாளைக்கு 1/2 – 1 குவளை பால் அல்லது 1 கப் யோக்கட் வளரும் குழந்தைகளுக்கும் வளர் இளம்பருவத்தினருக்கும் சிபார்சு செய்யப்படுகிறது.

**வைத்தியகலாநிதி கோ.றஜீவ்**

## ஒவ்வொரு 8 மணி நேரத்திற்கும் ஒருவர் கொரோனாவால் உயிரிழப்பு

நாட்டில் தற்போது ஒவ்வொரு 8 மணி நேரத்திற்கும் ஒருவர் கொரோனா தொற்றால் மரணிப்பதாக அறிக்கை தெரிவிக்கின்றது என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று (திங்கட்கிழமை) நடைபெற்ற ஊடக சந்திப்பில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பணிப்பாளர் வைத்தியர் ஹரித அளுத்கே இதனை தெரிவித்துள்ளார்.

சில சந்தர்ப்பங்களில் மூன்று மணித்தியாலங்களுக்கு ஒரு மரணமும் பதிவாகியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் எதிர்வரும் பண்டிகைக் காலங்களில் நாட்டில் கொரோனா தொற்று மிக வேகமாகப் பரவ கூடும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேநேரம், சுகாதார அமைச்சில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய சுகாதார சேவைகளின் துணை அதிகாரி வைத்தியர் ஹேமந்த ஹெரத், பண்டிகை காலங்களில் பயணத்தைக் கட்டுப்படுத்துமாறு பொது மக்களிடம் கோரிக்கை விடுத்தார்.

## தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் ஆயிரத்து 151 பேர் கைது



நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் ஆயிரத்து 151 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹன இந்த விடயம் தொடர்பாக தெரிவித்துள்ளார்.

குறிப்பாக கடந்த 24 மணித்தியாலங்களில் தனிமைப்படுத்தல் விதிமுறைகளை கடைப்பிடிக்காத 40 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

முகக்கவசம் அணியாமை மற்றும் சமூக இடைவெளியை பேணாமை உள்ளிட்ட தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறியவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கூட்டமைப்பினை யாராலும் பிளவுபடுத்தவோ தடை செய்யவோ முடியாது



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை யாராலும் பிளவுபடுத்தவோ தடை செய்யவோ முடியாது என அக்கட்சியின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை தடைசெய்ய வேண்டும் என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர நாடாளுமன்றில் அண்மையில் குறிப்பிட்டிருந்தார்.

அவரது குறித்த கருத்து தொடர்பாக தமிழ் பத்திரிக்கை ஒன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியில் பதிலளிக்கும் போதே இரா. சம்பந்தன் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

கூட்டமைப்பு ஒருபோதும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் கட்சியாக செயற்பட்டதில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

கூட்டமைப்பை விடுதலைப் புலிகள் ஆதரித்தார்கள் என்பதற்காக அதை விடுதலைப் புலிகளின் அரசியல் கட்சி என்று எவரும் கூற முடியாது என்றும் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் ஏகோபித்த கட்சியான கூட்டமைப்பு, மக்களினால் நாடாளுமன்றத்திற்கு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தது மட்டுமல்லாமல், வட மாகாண சபை மற்றும் பிற உள்ளூராட்சி அமைப்புகளுக்கும் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்தோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளிநாடுகளில் பல நாடுகளுடன் உறவுகளை வளர்த்துக் கொண்டது, அத்தகைய அரசியல் கட்சியை தடை செய்ய யாருக்கும் உரிமை இல்லை என்றும் இரா. சம்பந்தன் குறிப்பிட்டார்.

## போரில் கொல்லப்பட்ட உறவுகளை நினைவுகூற அனைவருக்கும் உரிமையுள்ளது

போரில் கொல்லப்பட்ட உறவுகளை நினைவுகூற அனைவருக்கும் உரிமையுள்ளதாக பீல்ட் மார்ஷல் சரத்பொன் சேகாவுக்கு, மனோ கணேசன் சபையில் பதிலளித்தார்.

நாடாளுமன்றில் நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்ற குழுநிலை விவாதத்திலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், “நானும், எம்பி சரத் பொன்சேகாவும் ஒரே கூட்டணியில் இருக்கிறோம். ஆகவே மேலே பார்த்து எச்சில் துப்ப நான் விரும்பவில்லை. மேலும், சபையில் தரக்குறைவான சொற்பிரயோகம் செய்யவும் விரும்பவில்லை.

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா என் பெயர் குறிப்பிட்டு பேசியுள்ள காரணத்தால் நான் இங்கே பதில் கூற வேண்டியுள்ளது.

உலகிலேயே தலை சிறந்த இராணுவத் தளபதி என்று சொன்ன வாயாலேயே உங்களை கைது செய்து இழுத்து வர சொன்னார்கள்.

அக்காலத்தில் ‘புலி’ என குற்றம் சாட்டப்பட்ட எனது கண் முன்னாலேயே, புலிகளை கொன்ற உங்களை, ஒரு மிருகத்தை போன்று இழுத்து போனார்கள். இதனை மறந்து விட்டீர்களா? எனக்கு அரசியலில் நீண்ட வரலாறு உள்ளது.

2010ஆம் வருடத்தில் உங்களுக்காக தேர்தலில் நான் பணியாற்றியது மறந்து விட்டதா? தமிழ் உறுப்பினர்கள் பணியாற்றியது மறந்து விட்டதா? அப்போது மாவீரர் தினம் வடக்கு, கிழக்கில் அனுஷ்டிக்கப்படவில்லையா?

புயல் தமிழ் பிரதேசத்தில் வீசியிருக்க வேண்டும் என்று கூறும் உங்கள் மீது தமிழ் மக்களும், மக்கள் பிரதிநிதிகளும் இப்போது கோபமாக இருக்கிறார்கள் தெரியுமா?



என்னை பொறுத்தவரையில் இந்நாட்டில் புயல், சுனாமி, இனவாதம், அடிப்படைவாதம், மதவாதம் எதுவும் கூடாது என நினைக்கிறேன்.

நான் தமிழன், இந்து என்பவற்றால் பெருமையடைகிறேன். ஆனால் அவற்றை விட இலங்கையன் என்பதிலேயே அதிக பெருமையடைகிறேன். நாம் எல்லோரும் அப்படியே சிந்திக்க வேண்டும் எனவும் விரும்புகிறேன்.

புலிகள் இயக்கம் மீது தடை உண்டு. ஆகவே அவர்களின் பெயரை கூறாமல் இருக்கலாம். ஆனால், போரில் இறந்த சாதாரண மக்களையும் ஆயுத போராளிகளையும் நினைவுகூர உரிமை உண்டு.

அவர்களது குடும்பத்தோருக்கு உரிமை உண்டு. இறந்து போன பிள்ளைகளையும் சகோதரர்களையும் கணவர்களையும் நினைவுகூர உரிமை உண்டு

அதேபோல் புலிகள் இயக்கம் மீதான தடையை நீக்கக் கூறி நீதிமன்றத்துக்கு சென்று வழக்காடவும் உரிமை உண்டு” என அவர் மேலும் தெரிவித்தார்.

# 2021ஆம் ஆண்டில் இலங்கைக்கு கொரோனா தடுப்பூசிகளைப் பெற முடியும்

2021ஆம் ஆண்டு நடுப்பகுதியில் இலங்கைக்கு கொவிட் -19 தடுப்பூசிகளைப் பெற முடியும் என்று சுகாதார அமைச்சின் தலைமை தொற்றுநோயியல் நிபுணர் டாக்டர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

எவ்வாறாயினும், தேவையான குளிர்ந்த வெப்பநிலையின் கீழ் தடுப்பூசிகளை சேமித்து வைப்பதில் நடைமுறை சிக்கல்களை எதிர்கொள்ள நேரிடும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரித்தானியாவில் அங்கீகரிக்கப்பட்ட கொரோனா தடுப்பூசி தற்போது கணிசமாக குளிர்ந்த வெப்பநிலையில் வைக்கப் படுவதன் மூலம் பயன்படுத்தப்படுகிறது.

தற்போது இலங்கைக்கு அந்த வசதி இல்லை என்பதோடு, வைரஸ் தொடர்பாக இதுவரை எந்தவொரு தடுப்பூசிக்கும் ஒப்புதல் அளிக்கப்படவுமில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், உலக சுகாதார அமைப்பால் அங்கீகரிக்கப்படும் வரை இலங்கை எந்த கொரோனா தடுப்பூசி யையும் பெறாது எனவும் அவர் கூறி யுள்ளார்.

# தேசிய பாடசாலைகளை 1,000 ஆக உயர்த்தும் திட்டத்திற்கு அங்கீகாரம்

தேசிய பாடசாலைகளின் எண்ணிக் கையை 1,000 ஆக உயர்த்த கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் முன்வைத்த திட்டத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நேற்று (திங்கட்கிழமை) ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் ஒன்லைன் மூலம் இடம்பெற்ற அமைச் சரவை கூட்டத்தின் போதே இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளையும் உள்ளடக்கிய இந்த திட்டத்தினை மூன்று கட்டங் களாக செயற்படுத்த கல்வி அமைச்சு திட்டமிடப்பட்டுள்ளது.

முதல் கட்டமாக தேசிய பாட சாலைகள் இல்லாத 123 பிரதேச செயலக பிரிவுகளில் ஒவ்வொன்றிலும் தேர்ந் தெடுக்கப்பட்ட பாடசாலையை தேசிய பாடசாலையாக உருவாக்கும் திட்டத்தை கல்வி அமைச்சர் முன்வைத்தார்.

மேலும், அடையாளம் காணப்பட்ட 673 பாடசாலைகளை இரண்டாம் கட் டத்தின் கீழ் தேசிய பாடசாலைகளாக அபிவிருத்தி செய்யவும் தற்போதுள்ள 373 தேசிய பாடசாலைகளை மூன்றாம் கட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யவும் கல்வி திட்டமிட்டுள்ளது.

# வீடு புகுந்த திருடன் மடக்கிப் பிடிப்பு

யாழ்.கல்வியங்காடு பகுதியில் இன்று அதிகாலை வீடொன்றுக்குள் நுழைந்து கொள்ளையிட முயற்சித்த திருடனை பொதுமக்கள் மடக்கி பிடித்து நையப்புடைத்த பின் பொலிஸாரிடம் ஒப்படகத்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குற்பட்ட கல்வியங்காடு புதியசெம்மணி வீதியிலுள்ள சிவஞானம் கருணாநிதி என்பவரின் வீட்டில் இன்று (08-12-2020) செவ்வாய்க்கிழமை அதிகாலை திருட முற்பட்ட இனந் தெரியாத நபர் ஒருவர் பொதுமக்களின் உதவியுடன் மடக்கிப்பிடிக்கப்பட்டு கோப்பாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த கோப்பாய் பொலிஸார் சந்தேக நபரை பொலிஸ்நிலையம் அழைத்துச்சென்றதோடு மேலதிக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். வீட்டின் உரிமையாளரால் பொலிஸ் நிலையத்தில் குறித்த சம்பவம் தொடர்பாக முறைப்பாடு பதிவு செய் யப்பட்டுள்ளது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## தற்கொலைத் தாக்குதல்...

யப்பட்டுள்ளதுடன் அவர்கள் நேற்று, கொழும்பில் உள்ள பயங்கரவாத தடுப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவின் தலைமையகத்துக்கு மேலதிக விசாரணைகளுக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில், மட்டக்களப்பு விஷேட பொலிஸ் குழுவினர், பயங்கரவாத தடுப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவினருடன் இணைந்து நடாத்திய சிறப்பு நடவடிக்கையில் 20 வயதான இளைஞர் ஒருவரைக் கைது செய்திருந்தனர்.

அதனைத் தொடர்ந்து முன்னெடுத்த சிறப்பு விசாரணைகளில், வெளிப்படுத்தப்பட்ட தகவல்களுக்கு அமைய இந்த ஆறு பெண்களும் கைது செய்யப்பட் டுள்ளனர். இவர்கள் ஏற்கனவே 21/4 தாக்குதல்கள் தொடர்பில் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த 6 பெண்களும் கைது செய்யப்பட்ட விவகார விசாரணைகளில் ஏற்கனவே 15 ஆண்களும் மூன்று பெண்களுமாக 18 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்நிலையிலேயே தற்போது மேலும் 6 பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பயங்கரவாத தடுப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவின் தகவல்கள் தெரிவித்தன.

இந்நிலையில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம், பயங்கரவாத தடுப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவு மற்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரசாத் ரணசிங்கவின் மேற்பார்வையில் பயங்கரவாத தடுப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் பிரசன்ன அல்விஸின் ஆலோசனைக்கு அமைய மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## மடுவுக்கு...

இந்நாட்டின் அனைத்து பிரஜைகளுக்கும் வடக்கிலிருந்து தெற்கிற்கும், கிழக்கிலிருந்து மேல் மாகாணங்களுக்கும்,

சுதந்திரமாக பயணிக்கக் கூடிய யுகமொன்றை அமைப்போம் என நான் அன்று மிகவும் தெளிவாக குறிப்பிட்டிருந்தேன்.

இன்று இந்த தம்பபவனி மின் உற்பத்தி நிலையம் அந்த சுதந்திரத்தின் விளைவாக ஏற்படுத்தப்பட்டது என பிரதமர் மஹிந்த ராஜபக்ஸ தெரிவித்தார்.

நாட்டின் தேசிய மின் கட்டமைப்பில் 103.5 மெகாவொட் திறனை இணைக்கும் மன்னார் தம்பபவனி இலங்கையின் முதலாவது காற்றாலை மின் உற்பத்தி நிலையம்,

இன்று செவ்வாய்க்கிழமை 2020.12.08 பிரதமர் மஹிந்த ராஜபக்ஸ அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது.

-அதனைத்தொடர்ந்து உரைாற்றுகையிலேயே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

## கொரோனா தொற்று...

அந்த சிசுவுக்கு கொரோனா தொற்று உறுதியாகியிருந்தது எனினும், நிமோனியா காய்ச்சலே மரணத்துக்கு காரணமென கண்டறிப்பட்டுள்ளது என வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும், அந்த சிசுவின் தாய், தந்தை ஆகிய இருவ ரிடமும் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனைகளில் அவ்விருவருக்கும் கொரோனா வைரஸ் தொற்றியிருக்க வில்லை என வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் கடந்த 37 நாட்களில் (நவம்பர் 01 முதல் டிசம்பர் 07 வரை) 122 பேர் சாவடைந்துள்ளனர்.

நாட்டில் கொரோனாவின் மூன்றாவது அலை மூலம் நேற்றிரவு வரை 25 ஆயிரத்து 25 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது. இவர்களில் இதுவரையில் (ஒக்டோபர் 22 முதல் நேற்று வரை) 129 பேர் பலியாகியுள்ளனர்.

மினுவாங்கொடை கொத்தணி மூலம் 3 ஆயிரத்து 59 பேருக்கும், பேலியகொட கொத்தணிமூலம் 21 ஆயிரத்து 259 பேருக்கும் வைரஸ் தொற்றியுள்ளது.

இவர்களில் 17 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் குணமடைந்துள்ளனர். நேற்று மாத்திரம் 703 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது.

அதேவேளை, இலங்கையில் நேற்று வரை மொத்தமாக 28 ஆயிரத்து 580 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்றி யுள்ளது. இவர்களில் 20 ஆயிரத்து 804 பேர் குணம டைந்துள்ளனர்.

இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் நேற்றும் இருவர் உயிரிழந்தார். இதன்படி இலங்கையில் கொரோனாத் தாக்கத்தால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை,

142 ஆக அதிகரித்துள்ளது. உயிரிழந்தவர்களில் பெரும் பாலானவர்கள் கொழும்பு மாவட்டத்தை சேர்ந்தவர்களாவர்.

## தனிமையில்...

செல்வரஞ்சினி ( வயது 41 ) என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் வீட்டில் தனித்து இருந்து சமயம் அவர் தீயில் எரிவதை அயலவர்கள் அவதானித்தனர். உடனடியாக மீட்டு வைத்தியசாலைக்கு சேர்த்தனர். பொலிசாருக்கும் தெரியப்படுத்தினர்.

வைத்தியசாலையில் அவர் இன்று உயிரிழந்துள்ளார். உயிரிழப்பு தொடர்பில் வவுனியா நகர் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சிவநாதன் கிஷோர் மேற்கொண்டார்.

## பணப்பை...

இந்த சம்பவம் இன்று மதியம் இடம்பெற்றிருக்கின்றது. யாழ். நகரில் காங்கேசன்துறை வீதியில் நடந்து சென்ற வயோதிப பெண்ணின் பணப் பையை பறித்த இளைஞர் ஒருவர் தப்பி ஓடியுள்ளார். இதன்போது மூதாட்டி எழுப்பிய குரலை அடுத்து வீதியால் பயணித்த இளகஞர்கள் குறித்த திருடனை மடக்கிப் பிடித்து மூதாட்டியின் பணப்பையை மீட்டெடுத்தனர். இதன்போது மூதாட்டி பறிகொடுத்த 20 ஆயிரம் ரூபா பணமும் பத்திரமாக மீட்கப்பட்டது. இதனையடுத்து அங்கே கூடி நின்றவர்களால் திருடனை நையப்புடைத்தபோது பணப்பையை பறிகொடுத்த மூதாட்டி அதனை தடுத்து நிறுத்தி திருடனிற்கு உணவும் வாங்கி கொடுத்து ஆயரம் ரூபா பணமும் வழங்கி அனுப்பி வைத்தார். இதன்போது அங்கே கூடியவர்கள் திருடனை பொலிசாரிடம் ஒப்படைக்க முனைந்தபோதும் மூதாட்டி அதற்கும் இணங்கவில்லை.

## தமிழர் பகுதிகளில்...

நாசமாக்க இடமளிக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், தமிழர் பகுதிகளில் மணல் அகழ்வு ஒரு மாபியா போன்று முன்னெடுக்கப்பட்டு வருவதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, இதனைக் கருத்திற்கொண்டு தமிழ் மக்களின் நிலங்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளார்

## மாத்தளன்...

கடற்தொழிலாளர்கள் அத்து மீறிய இந்திய இழுவைப் படகுகளை கண்டுள்ளார்கள்.

இதன்போது நான்கு மீனவர்களின் வலைகள் இந்திய இழுவைப்படகுகளால் அறுத்து விடப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட மீனவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

நான்கு மீனவர்களின் தலா ஒரு இலட்சத்தி 80 ஆயிரம் ரூபா பெறுமியான வலைகள் இழுவைப்படகுகளால் அறுக்கப்பட்டுள்ளதுடன் அவை கடலின் நீரோட்டத்தில் அடித்து செல்லப்பட்டுள்ளன.

வெறும் படகுகளுடன் இன்று(08) காலை கரை திரும்பிய மீனவர்கள் சம்பவம் குறித்து மவாட்ட கடற்தொழில் நீரியல்வளத்திணைக்களத்திற்கு தெரியப்படுத்தியுள்ளார்கள்.

இந்தி மீனவர்களின் அத்துமீறல் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதால் தங்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாக மீனவர்கள் தெரிவித்துள்ளார்.

## கொரோனா தடுப்பு...

எவ்வாறிருப்பினும், இதுவரையில் உலக சுகாதார ஸ்தாபனத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எந்தவொரு மருந்தோ அல்லது தடுப்பூசியோ உலகில் இல்லை. அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட தடுப்பு மருந்தை சில நாடுகள் பயன்படுத்தத் தயாரான போதிலும் உலக சுகாதார ஸ்தாபனம் அதற்கு இன்னும் அனுமதியளிக்கவில்லை.

மேலைத்தேய மருந்தாயினும் உள்நாட்டு மருந்தாயி னும் அரசாங்கம் அது தொடர்பாக மக்களுக்கு உண்மையைத் தெளிவுபடுத்த வேண்டும். இலங்கையில் தயாரிக்கப்பட்ட ஆயுர்வேத மருந்தொன்று தொடர்பாக பரிசோதனைகள் முன்னெடுக்கப்படுகின்றன. உண்மையில் இந்த மருந்து சாதகமான பிரதிபலனைத் தருமாயின் உலக நாடுகளில் இலங்கை முக்கியத்துவம் பெறும்.

கொரோனா தடுப்பூகள் தொடர்பாக நாம் தயாராவதில் எவ்வித தவறும் கிடையாது. ஆனால், உலகில் தற்போது காணப்படுகின்ற நிலைமையில் இலங்கைக்கு தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்வதற்கான வாய்ப்புக்கள் மிகக் குறைவாகும்.


கொரோனா தடுப்பிற்கான மருந்து கண்டு பிடிக்கப்பட்டாலும் தனவந்த நாடுகள் மாத்திரம் அதனைப் பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்பளிக்காது இலங்கையைப் போன்று அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கும் அவற்றைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் உலக சுகாதார ஸ்தாபனம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கையில் ஏழு அல்லது எட்டு மணித்தியா லங்களுக்கு ஒரு கொரோனா மரணம் பதிவாகிறது. சில சந்தர்ப்பங்களில் மூன்று மணித்தியாலங்களுக்கு ஒரு மரணமும் பதிவாகியுள்ளது. எனவே, இந்த நிலைமையைக் கட்டுப்படுத்த கொரோனா மரணங்கள் தொடர்பாக ஆராயும் மீளாய்வுக் குழுவொன்றை நியமிக்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அந்தக்குழு, அட்டலுகம மற்றும் கொழும்பைப் போன்று அபாயமுடைய பகுதிகள் தொடர்பாக விசேட மதிப்பீட்டைச் செய்து டிசம்பர் இறுதியில் அதிகளவான மரணங்கள் பதிவாகக் கூடும் என்ற நிலைமையை மாற்றியமைக்கப் பரிந்துரைகளை முன்வைக்க வேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

# பால்நிலை வன்முறையற்ற பயணத்தில் தீர்க்கப்படவேண்டியதும் திருத்தப்படக்கூடியதும்

நவம்பர் 26 ஆம் திகதி முதல் டிசம்பர் 10 ஆம் திகதி வரையான பால்நிலை வன்முறைகளுக்கு எதிரான வாரத்தை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது.




**உண்மையில் பால்நிலை சார்ந்த வன்முறைகள் பற்றி நாம் பேசும்போது அதை பெண்களுக்கு மட்டுமே நிகழக் கூடியதான ஒரு வன்முறையின் வடிவமாகவே பார்க்கிறோம். ஆனால் உண்மையில் இங்கு ஆண்களும் வன்முறைக்கு உட்படக்கூடிய சூழல் தற்போது அதிகரித்து வருகின்ற ஒரு போக்கே காணப்படுகிறது.**

சத்தியா (பெயர் மாற்றப்பட்டுள்ளது.) முதலாம் ஆண்டில் கல்வி பயிலும் பல்கலைக்கழக மாணவி . பெற்றோர் அவரின் ஆசைப்படி அப்போதுதான் புது மாடல் ஆக வந்த தொலைபேசி ஒன்றை வாங்கி கொடுத்துள்ளார்கள். புது ஸ்மார்ட் கையடக்கத்தொலைபேசியை பார்த்த ஆர்வக்கோளாறு தாங்கமுடியாமல் உடனே முக நூல், வைபர் உட்பட்ட எல்லா சமூக ஊடகங்கலள் மற்றும் சமூக வலைப்பின்னல்களையும் அதில் தரவிறக்கம் செய்து வைத்துள்ளார் .சத்தியாவை நீண்ட நாட்களாகவே காதலித்து வந்துள்ளார் அவரின் சிரேஷ்ட மாணவரான ரமேஷ்.. இருவரும் அடிக்கடி தொலைபேசியில் வீடியோ மூலம் உரையாடுவதும் புகைப்படங்கள் பரிமாறுவதும் வழக்கம் . சத்தியாவிடம் அதி நவீன தொலைபேசியில் அவளின் அழகான புகைப்படங்களை தனக்கு அனுப்ப சொல்லி கேட்க சத்தியாவும் விதம் விதமான படங்களை எடுத்து பகிர்ந்துள்ளார். முதலில் சாதாரணமாக புகைப்படத்தை கேட்ட ரமேஷ் நாளாக நாளாக ஆபாச ஆடையுடன் கூடிய புகைப்படங்களை அனுப்பும் படி கேட்க முதலில் மறுத்தாலும் தனது காதலன் மீதான அதித நம்பிக்கையும் கணவர் ஆகப்போகிறவர் தானே என்னும் கற்பனையும் சேந்ர்து கொள்ள அவரின் ஆசைப்படி படங்களை அனுப்பிய சத்தியா தனது புகைப்படங்கள் எல்லாவற்றையும் ரமேஷ் மட்டுமன்றி அவரின் அறை நண்பர்கள் அனவருமே ஒன்றிணைந்து பார்க்கின்ற விடயம் தெரிய வந்தபோது அதிர்ச்சியுற்றார். இதனால் மனம் உடைந்து போன சத்தியா ரமேஷின் காதலை துண்டிக்க முயன்றபோது ஒரு கட்டத்தில் அந்தப் புகைப்படங்களை இணையத்தில் சில போட்டுவிடுவதாக அவரால் அச்சுறுத்தலுக்கு உள்ளானபோது அவமானம் தாங்கமுடியாமல் தற்கொலைக்கு முயன்று பின்னர் பெற்றோரால் காப்பற்றப்பட்டு இப்போது தகுந்த உளவள நிலையம் ஒன்றில் தொடர் கிசிச்சை பெற்று வருகின்றார். ரமேசை போலீஸ் விசாரணைக்கு உட்படுத்தி வருகின்றனர்

இது அண்மையில் நடைபெற்ற ஒரு உண்மை சம்பவம்!

இதுபோன்ற பல சம்பவங்களை நாம் தாண்டி வந்துகொண்டுதான் இருக்கிறோம் .இந்தச் சம்பவம் நம்மிடம் கூற முனைவது பெண்கள் சமூக வெளிகளில் பல்வேறுபட்ட வன்முறைகளை எதிர்கொள்வதையும் அவ்வாறு வன்முறைக்கு உள்ளாகும் போது அல்லது அது தொடர்பான அச்சத்தின் காரணமாக பல விடயங்களில் தமது நிலைப்பாட்டை எடுத்துரைக்க தயங்குகின்ற சூழலே உலகெங்கும் காணப்படுகிறது என்கின்ற உண்மை நிலைப்பாட்டையும் ஆகும் .

ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 25ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் 10ஆம் திகதி வரையான பால்நிலை வன்முறைக்கு எதிரான பதினாறு நாட்களை கொண்ட இருவாரங்கள் எதிர்வரும் டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி மனித உரிமைகள் தினத்தன்று நிறைவு செய்யபடுகின்ற தருணத்தில் பெண்களின் மீதான வன்முறையும் மனித உரிமை மீறலாகவே கருதப்படுவதுடன் அது நாட்டின் அபிவிருத்திக்கும் பாதகமான சூழலையே ஏற்படுத்துகிறது என்பதை நாம் அனைவருமே நினைவில் கொள்ள வேண்டியது அவசியமாகும் .

இது போன்ற சம்பவங்கள் பலவற்றை நாம் எல்லோருமே கேள்வியுற்றுருக்கக்கூடும் இங்கு நடைபெற்ற வன்முறையை நோக்கும்போது இதில் பாதிக்கபட்ட மற்றும் பாதிப்பை ஏற்படுத்திய நபர் என இருவருமே தமது வாழ்கையின் ஒரு பகுதியை இதனால் இழந்துவிட நேரிடும் அபாயமே காணப்படுகிறது உண்மையில் இது போன்ற வன்முறைகளில் பெரும் விளைநிலமாக பல்வேறு காரணிகள் இருந்தபோதும் சமூக விழுமியங்கள் ,மூட நம்பிக்கைகள் போதைபொருள் பாவனை அதிகாரமையம் போன்றன குறிபிடத்தக்க சில காரணிகள் ஆகும் எமது சமூகத்தில் பெண்களுக்கு எதிரான இது போன்ற வன்முறைகள் தனியே அந்த பெண்ணை மட்டுமன்றி அவர் சார்ந்த குடும்பம், சமூகம் என பலரையும் பாதிக்கும் பண்புகளை கொண்டிருக்கும் .

உண்மையில் பால்நிலை சார்ந்த வன்முறைகள் பற்றி நாம் பேசும்போது அதை பெண்களுக்கு மட்டுமே நிகழக்கூடியதான ஒரு வன்முறையின் வடிவமாகவே பார்க்கிறோம். ஆனால் உண்மையில் இங்கு ஆண்களும் வன்முறைக்கு உட்படக்கூடிய சூழல் தற்போது அதிகரித்து வருகின்ற ஒரு போக்கே காணப்படுகிறது. அதிகாரத்தின் மையமாக தமை நினைத்துக்கொள்கின்ற பெண்கள் தம்மை சூழ உள்ள ஆண்களை வன்முறை செய்கின்றனர். இதன் அடிப்படையிலே ஆணாதிக்கம் என்கின்ற சொல்லும் பொருள் கொள்ளபடுகிறது .ஏனெனில் ஆணாதிக்கம் என்பது வெறுமே ஆண்களுக்கு உரிய சிந்தனை மடுமாற்றி அது ஒரு அதிகாரத்தின் குறியீடு. பெண்களும் ஆணோ பெண்ணோ தம்மை அதிகாரத்தின் மற்றும் வலுவின் மையம் என்று என்று எண்ணிக்கொள்ளும் போது அவர்கள் தம்முடன் இருக்கின்ற மற்றொரு பாலாரை நலிவுற்றவர்களாக கருதி அவர்களை வன்முறை செய்கின்றனர். இது போன்ற சந்தர்பங்களில் பெண்கள் ஆணாதிக்கம் செய்பவர்கள் ஆக மாறுகின்றனர் .

வன்முறைகளை எதிர்கொள்ளும் ஒருவர் அதைக் கடந்து பயணிப்பது என்பது சற்று சிக்கலான விடயமாகும். இருப்பினும் அவருக்கு தேவையான வழிகாட்டிகளும் ஆலோசனைகளும் சட்ட ரீதியிலான தீர்வுகளும் வழங்கப்படும்போது அவர் அதிலிருந்து மீண்டெழுவார் .

தற்போது இலங்கையில் உள்ள பல்வேறு சட்டங்கள் பால்நிலை சாந்த வன்முறைகளை இல்லா தொழிப்பதுக்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளத் துணை புரிகிறது. இவற்றுள் அனைத்துப் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லா தொழிக்கும் பிரகடனம் இலங்கையால் ஏற்றுகொள்ளபட்துள்ளதுடன் இலங்கையின் 2005 ஆம் இலக்க குடும்ப வன்முறை தடைச் சட்டம் மற்றும் இலங்கையின் குற்றவியல் தண்டனை சட்டக்கோவையின் பிரகாரம் பாலியல் பலாத்காரம் போன்றவற்றுக்கான கடும் காவல், இணையவழிக் குற்றங்களை தடுபதுகான சட்டம் பகிடிவதை தடுப்பது தொடர்பான சட்டம் போன்றன பெண்களுக்கு எதிரான வன்முறைகள் இடம் பெறும்போது அவற்றை சட்டம் வழியே எதிர் கொள்ள உதவும் .

இருப்பினும் நமது சமூகத்தின் சரியான பங்களிப்பும் சுதந்திரமான ஆனால் வழிகாட்டக்கூடிய சமூக நிறுவனங்களின் உதவியும் இது போன்ற வன்முறைகள் நடைபெறுவதை தடை செய்ய உதவும். அத்துடன் ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகிய இரு பாலாரின் விழிப்புணர்வும் வருமுன் காக்கின்ற எச்சரிக்கையும் தவறுகள் நடைபெறவிடாமல் தடுக்க உதவும். எல்லாவற்றையும் விட அனைவருமே எதிர்ப்பாலோரை மதித்து நடக்கவும் அவர்களின் உணர்வுகளை ஒத்துணர்வுடன் விளங்கிக் கொள்ளவும் சிறுவயது முதலே குழந்தைகளை பழக்குவதும் வன்முறைகளை வளர்க்கவிடாமல் தடுக்க உதவும் என்பதே இன்னும் தெளிவான யதார்த்தம் .

**த.கிருத்திகா**
**(இணைப்பாளர் - மகளிர் அபிவிருத்தி நிலையம்)**